**Date: 17-09-2021**
**எஸ்.டி.சி. எண். 1951/2019**
**ம.சா.1 ஈசாக் த/பெ. யாகோப்**

**குறுக்கு விசாரணை-**

நான் மரியா என்டர் பிரைசஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஆவேன். மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்பதற்கான எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மரியா என்டர் பிரைசஸ் நிறுவனம் 15 ஆண்டுகளுக்கு முன்பு பொன்னேரி கிருஷ்ணாவரத்தில் இருந்தது என்றால் சரிதான். என்டர் பிரைசஸ் நிறுவனம் என்பது இரும்பு கம்பிகளின் கழிவை வாக்கி சுத்தம் செய்து கம்பெனியில் கேட்கும் நபருக்கு சப்ளை செய்வதற்கான நிறுவனம் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தை நடத்த தமிழ்நாடு வணிகத்துறையில் இருந்து டின் ஜிஎஸ்டி சான்று வாங்கவேண்டும் என்றால் சரிதான். நான் மேற்படி சான்றை வாங்கியுள்ளேன். நான் மேற்படி சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. டிஎன்ஜிஎஸ்டி பின் நம்பரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை. அப்போத டின்ஜிஎஸ்டி என்றாலும் தற்போது ஜிஎஸ்டி என்றாலும் எனவே நான் தற்போது நடத்தும் நிறுவனத்திற்கான ஜிஎஸ்டி சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல்செய்யவில்லை. டிஎன்ஜிஎஸ்டி மற்றும் ஜிஎஸ்டி நம்பவரை நீதிமன்றத்தில்தாக்கல் செய்யாததால் என் நிறுவனம் சட்டபூர்வமான நிறுவனம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி கோயம்புத்தூரை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நான் செய்யும் தொழிலைத்தான் செய்கிறார் என்றால் பாலாஜி என்டர்பிரைசஸ் நிறுவனம் மூலமாக எதிர்மனுதாரர் தொழில் நடத்திவருகிறார். என் நிறுவன தொழிலும் எதிரி தொழிலும் ஒன்று என்பதால் எங்களுக்குள் ஏற்பட்ட பரஸ்பர நட்பின் மூலமாக நாங்கள் இருவரும் சரக்குகளை பரிமாறிக்கொள்வோம் என்றால் சரிதான். 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் எதிரியின் கம்பெனிக்கு சென்று அவரது சரக்குகளை நான் விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வியாபாரத்தில் லாபம் கிடைத்ததால் அதன் மூலம் பொன்னேரி கிருஷ்ணாபுரத்தில் வியாபாரம் தொடங்கினேன் என்றால் சரியல்ல. கூட்டு லாப வருமானத்தில் அவர் பெயரில் 9 1/2 சென்டும் என் பெயரில் 2 சென்டும் நிலம் வாங்கினோம் என்றால் சரியல்ல. கூட்டு வருமானத்தில் வாங்கிய 9 1/2 சென்டில் எனக்கு 5 சென்டு எதிரி தரவேண்டும் என்றாலும் சரியல்ல. இருவரும் கூட்டாக சேர்ந்து தொழில் எதுவும் செய்யவில்லை. எனக்கு 5 சென்ட் நிலைத்தை எதிரி கொடுக்காமல் சென்டரல் பேங் ஆப் இந்தியா வங்கியில் எதிரி அடமானம் வைத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தொழிலில் சரக்கு தேவைப்பட்டால் நிறுவனத்திற்கான கொட்டேசன் அளிப்போம் என்றால் சரிதான். மேற்படி கோட்டேசனில் சரக்கு தேவைக்கான அனைத்து விவரங்களையும் பணமதிப்பையும் குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். மேற்படி எந்த கோட்டேசனையும்எதிரி எனக்கு தரவில்லை. பொதுவாக ஒரு கோட்சேனுக்கு சரக்கு அனுப்பும் போது இன்வாய்ஸ் லெட்டர் அனுப்புவோம் என்றால் சரிதான். அவ்வாறு நான் 13 முறை அனுப்பிய பொருட்களின் கோட்டேசனை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, இன்வாய்ஸ் மட்டும் தாக்கல்செய்துள்ளேன். என் வாக்குமூலத்தில் எதிரிக்கு 13.04.2013ல் இருந்து 31.08.2014 வரை 13 முறை சிஎஸ் கிராப்பை அனுப்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் 13 முறையும் எந்த கம்பெனியில் இருந்து வாங்கினேன் என்றும் எந்த மாதிரியான பொருள் என்றும், எத்தனை எண்ணிக்கை, எவ்வளவு எடையில் வாங்கினேன் என்று தனித்தனியாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் உண்மையில் பொருள் அனுப்பி இருந்தால் ஒவ்வொருமுறையும் தனித்தனியாக பொருட்களின் எண்ணிக்கை, மதிப்பு, எடையை குறிப்பிட்டு இருப்பேன் என்றாலும் அவ்வாறு குறிப்பிடாததால் எதிரியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கில் தான் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. தமிழ்நாடு வணிவரித்துறையில் கொட்டேசன் அடிப்படையில் இன்வாய்ஸ் லெட்டர் அசல் மற்றும் நகலுடன் சரக்கையும் கொடுத்து அனுப்புவோம் அவ்வாறு வழியில் தமிழ்நாடு வணிவரித்துறையினர் சோதனை இட்டால் 2வது நகலை முத்திரையிட்டு அனுப்பிவைப்பார்கள் என்றால் முதலில் சரிதான் என்று கூறிவிட்டு சாட்சி தற்போது அதுபற்றி தெரியாது என்கிறார். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மதசாஆ 1 முதல் 13 வரையில் தமிழ்நாடு வணிவரித்துறையினர் முத்திரை இல்லை என்றால் சரிதான். சரக்கு டெலிவரி வாங்கிய பின்பு 2 பில்லில் ஒரு ரசீதில் சரக்கை பெற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்து டிரைவரிடம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எதிரி பெற்றுக்கொண்டதற்கான ரசீதையோ டிரைவர் கொடுத்த ரசீதையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இன்வாய்ஸை தாக்கல் செய்துள்ளேன். இன்வாய்சுக்கான அசல் அவரிடமும் நகல் என்னிடமும் இருக்கும். வணிக வரித்துறையினர் எங்காவது சோதனை செய்தால் தான் ரசீதை சோதனையிட்டு கொடுப்பார்கள் என்றாலும் எதிரிக்கே கொண்டு சென்று கொடுத்திருப்பார்கள். நான் மொத்தமாக ரூ. 53,53,091 என்று மொத்தமாக காசோலை தொகையை குறிப்பிட்டுள்ளேன் அதில் 13 முறையில் ஒவ்வொரு முறை எவ்வளவு தொகை என்று குறிப்பிட்டு தனித்தனியாக சொல்லவில்லை என்றால' சரிதான். நான் 13 முறை அனுப்பி சரக்கை எந்த கம்பெனியில் நான் கொட்டேசன் கொடுத்து வாங்கினேன் என்றும் எந்த வகையான பொருளை வாங்கினேன் என்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் உண்மையில் பொருள் அனுப்பி இருந்தால் நான் மேற்படி 13 முறையில் ஒவ்வொரு முறையில் எந்த கம்பெனிக்கு இருந்து கொட்டேசன் வாங்கினேன் என்று பொருட்களின் விவரத்தையும் மதிப்பையும் குறிப்பிட்டு இருப்பேன் என்றாலும் அதற்கான விவரங்கள் என்னிடம் உள்ளது அது நீதிமன்ற ஆவணங்களில் இல்லை. 13 முறையில் ஒருமுறை பணம் கொடுக்காமல் இருக்கும்போது எந்த அடிப்படையில் மீண்டும் மீண்டும் அவருக்கு சரக்கு சப்ளை செய்தேன் என்றால் 2010ம் ஆண்டில் இருந்து எனக்கும் எதிரிக்கும் இருக்கும் நல்ல பழக்க வழக்கத்தின் அடிப்படையில் அவருக்கு பொருட்கள் சப்ளை செய்தேன். 2013ம் ஆண்டிலிருந்து எதிரி எனக்கு எந்த பேமென்டும் தரவில்லை. ஆனால் அனைத்திற்கும் சேர்ந்து மொத்தமாக ஒரு காசோலையை கொடுத்தார். 2013ம் ஆண்டில் இருந்து பணம் தராத எதிரிக்கு நான் எவ்வாறு பொருட்கள் சப்ளை செய்தேன் என்றால் நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். வருமான வரி கணக்கை நான் செலுத்திக்கொண்டு வருகிறேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய 5 சென்ட் நிலத்திற்காக எதிரிமீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு சரக்கிற்கான பணத்தை கேட்டதாக வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் எந்த தேதியில் எவ்வாறு கேட்டேன் என்று குறிப்பிடவில்லை என்றால் நான் தொலைபேசி மூலமாக எதிரியிடம் கேட்டேன்.

03/02/2015 அன்று எதிரி மேற்படி காசோலையை எனக்கு நான் அவரிடம் பலமுறை கேட்டுக்கொண்டதால் கொடுத்தார். மேற்படி விவரத்தை என்வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே எதிரி என்னிடம் எந்த சரக்கும் வாங்கவில்லை என்றாலும் என் வெற்று காசோலைகள் அவரது வெற்று காசோலைகள் என்னிடம் உள்ளது என்றாலும் அதை வைத்து எதிரியிடம் பணம் பறிக்கும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. குஜராத் ராஜ்கோட்டில் ஜெ.கே என்டர்பிரைசஸ், சீதாராமன் அன்ட் கோ , பங்கஜ் டிரேடர்ஸ் ஆகிய கம்பெனிக்கு சரக்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல. நான் சீதாராமன் அன்ட் கோ கம்பெனிக்கு மட்டும் அனுப்பினேன். மற்ற 2 கம்பெனி பற்றி எனக்கு தெரியாது. தமிழ்நாட்டில் ஜிஎஸ்டி 5 சதவீதம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சரக்கை குஜராத்திற்கு அனுப்பினால் 2 சதவீதம் ஜிஎஸ்டி என்றால் அதுபற்றி என் ஆடிட்டருக்குத்தான் தெரியும். தமிழ்நாட்டில் 10 லட்சத்திற்கு 5 சதவீதம் என்றால் சரிதான். குஜராத்தில் சி. பார்ம் குடுத்தால் 2 சதவீதம் தான் ஜிஎஸ்டி என்றால் சரிதான். ஜெ.கே என்டர்பிரைசஸ், சீதாராமன் அன்ட் கோ , பங்கஜ் டிரேடர்ஸ் ஆகிய கம்பெனிக்கு எதிரியின் பாலாஜி என்டர்பிரைசஸ் தான் அதிகப்படியாக சரக்கு கொடுத்தார் என்றாலும் மேற்படி இரு நிறுவனத்திற்கும் நல்ல தொடர்பு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு என் மூலமாக சரக்கு போனால் பணம் கிடைக்காது என்பதால் வெங்கடாஜலபதி என்பவர் மூலமாக சரக்கு அனுப்பினேன் என்றால சரியல்ல. எங்கள் கம்பெனியின் மூலமாகவே மட்டுமே நாங்கள் சரக்கை அனுப்புவோம். சீதாராமன் கம்பெனிக்கு நாங்கள் பொருட்களை சப்ளை செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை. எதிரியுடன் ஒப்பந்தம் செய்து அதன்மூலமாக குஜராத்தில் உள்ள ஜெ.கே என்டர்பிரைசஸ், சீதாராமன் அன்ட் கோ , பங்கஜ் டிரேடர்ஸ் ஆகிய கம்பெனிக்கு புகார்தாரான என்னுடைய கம்பெனியில் இருந்து எதிரிக்கு சரக்கு அனுப்பி எதிரி மேற்படி சரக்குகளை மேற்படி 3 கம்பெனிக்கு அனுப்பி ஜிஎஸ்டியில் 2 சதவீதம் போக 3 சதவீதம் கமிசனை எதிரி எடுத்துக்கொள்ளலாம் என்றும் எதிரி என்னிடம் கொடுத்த பணத்தை நான் காசோலை ஆக்கிக்கொள்வேன் என்றாலும் இதுவே எங்களுக்கான ஒப்பந்தம் என்றால் சரியல்ல. பாலாஜி எண்டர்பிரைசசிற்கு ஒருமுறையும் சரக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

(எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் கு.வி ஒத்திவைக்கப்பட்டது)